(ஆ) குன்னூர் அரசு மருத்துவமனைக்கு தேயிலை வாரியம் அளித்த ரூபாய் ஒரு லட்சத்தை அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. மருத்துவக் கருவிகளை உடனே வாங்கி மருத்துவமனையில் பொருத்துமாறு மருத்துவப் பணிகள் மற்றும் குடும்பநலத்துறை இயக்குநர் பணிக்கப்பட்டுள்ளர்.

திரு. க. அரங்கசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, தேயிலை வாரியம் ஒரு லட்சம் ரூபாய் குன்னூர் மருத்துவ மனைக்கு வழங்குவதாக இருந்தது. இன்றைக்கு அதனுடைய நிலை என்ன என்பதை அறிய ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் சொன்னேன். தேயிலை வாரியம் அளித்த ஒரு லட்சம் ரூபாயை அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. மருத்துவக் கருவிகளை உடனே வாங்கி மருத்துவமனையில் பொருத்துமாறு மருத்துவப் பணிகள் மற்றும் குடும்பநலத் துறை இயக்குநர் பணிக்கப்பட்டுள்ளார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க வினா எண் 39, 40 ஒத்திவைக்கப்படுகின்றன. வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து அரசினர் சட்ட முன்வடிவுகள்.

திரு. நா. சுந்தரராஜ்: பாயின்ட் ஆப் ஆர்டர், சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருவார்.

திரு. நா. சுந்தரராஜ்: சார், நான் பாயின்ட் ஆப் ஆர்டர் கேட்கிறேன். சாதாரணமாக கேள்வி நேரம் முடிந்த பிறகு கேட்க வேண்டியதுதான். அனுமதிக்க மாட்டேன் என்று சொல்லக் கூடாது தாங்கள் . . . .

1980 பிப்ரவரி 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்ற பிறகு அனுமதிக்கிறேன். உட்காருங்கள்...

திரு. நா. சுந்தரராஜ்: முக்கியமான பிரச்னை. பாயின்ட் ஆப் ஆர்டருக்கு தயவுசெய்து அனுமதிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னுடைய முறையில் மாற்றம் செய்துகொள்ள எனக்கு உரிமை உண்டு. உட்காருங்கள். நான் பாயின்ட் ஆப் ஆர்டர் கொடுக்காமலே இருக்கலாம்.

திரு. நா. சுந்தரராஜ்: அப்படி சர்வாதிகாரம் வேண்டாம். நானும் முக்கியமான பிரச்னையைக் கிளப்ப வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதலில் சட்ட முன்வடிவின் அறிமுகம் முடியட்டும் என்றுதானே சொன்னேன். பின்னால் கேட்கலாம். கொஞ்சம் நாவடக்கத்தோடு பேச வேண்டும். பேரவைத் தலைவர் மீது சர்வாதிகாரம் என்று சொல்வது திரு. சுந்தரராஜுக்கு பண்பாகாது. உட்காருங்கள், கொஞ்சம் பண்போடு பேசக் கற்றுக்கொள்ளுங்கள்.

திரு. நா. சுந்தரராஜ்: என்னுடைய உரிமையைப் பறிக்கிறீர்கள் என்றுதான் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள்; பின்னால் பேசலாம். அடக்கமும் இருக்க வேண்டும்.

[முற்பகல் 10-10]

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: கேள்வி நேரம் முடிந்தபின் உறுப்பினர்கள் பாயின்ட்ஸ் ஆப் ஆர்டர் கேட்பது வழக்கம். அந்த முறையிலேதான் அவர்கள் எழுந்தார்கள். அதை தாங்கள் அனுமதித்திருந்தால் ஒன்றுமே கிடையாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பின்னர் அனுமதிக்கிறேன் என்று சொல்வதில் தப்பு இல்லை அல்லவா? அதைத்தான் நான் சொன்னேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : கேள்வி நேரம் முடிந்தவுடன் எல்லோரும் எழுந்து கேள்விகள் கேட்பதை பழக்கமாக வைத்துக் கொண்டிருக்கிறோம். அந்த முறையில் நீங்கள் உறுப்பினரை ஒருமுறை அனுமதித்திருக்கலாம். ஆகவே இந்த மசோதாக்களைப் பிரேரேபித்த பிறகாவது அவர்களை அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மசோதாக்களை அறிமுகம் செய்த பிறகு அவர்களை அனுமதிக்கிறேன் என்றுதான் சொன்னேன்.

(அ) கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு, 1980.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஆ) வருவாய் வாரிய நீக்கச் சட்ட முன்வடிவு, 1980.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு வருவாய் வாரிய நீக்கச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY